## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| H.M.O.P. No. 103/2021 | Date : 09.02.2024 | PW1 |
|---|---|---|
| Name: கந்தசாமி | S/o. பழனிசாமி | |
| Evidence Recorded Time: 11.59 A.M. to 1.02 P.M. | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிர்மனுதாரர் என் மனைவி. நான் E.E.E படித்துள்ளேன். தற்போது என்ன வேலை பார்க்கிறேன் என்றால் என் மாமாவோடு வெல்டிங் வேலை செய்து மேற்பார்வை செய்து வருகிறேன். அதில் மாத வருமானம் எவ்வளவு வருகிறது என்றால் மாதம் 15,000/- வருகிறது. நானும், எதிர்மனுதாரரும் காதலித்துதான் திருமணம் செய்து கொண்டோம். 2014 முதல் 2016 வரையுள்ள ஆண்டுகளில் கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டம் நரசாபுரம், ஒரு இஞ்ஜினியரிங் கம்பெனியில் பயிற்சியாளராக இருந்தேன். அந்த கம்பெனியில்தான் எதிர்மனுதாரரும் வேலை பார்த்தார். அங்கு வேலை பார்க்கும்போதுதான் எனக்கு எதிர்மனுதாரருக்கு காதல் ஏற்பட்டது. 29.08.2016-ல் எனக்கும், எதிர்மனுதாரருக்கும் கோலார் மாவட்டத்தில் திருமணம் நடைபெற்றது. நான் வன்னியர் பிரிவை சார்ந்தவர். எதிர்மனுதாரர் ஆதிகர்நாடக வகுப்பை சார்ந்தவர். நானும், எதிர்மனுதாரரும் வேறு வேறு சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதால் எங்கள் வீட்டில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் எதிர்மனுதாரர் வீட்டிலிருந்துதான் திருமணம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு என் பெற்றோர்கள் வரவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருடைய வீட்டில்தான் கோலாரில் வீடு பார்த்து என்னை எதிர்மனுதாரருடன் அமர்த்தினார்கள் என்றால் சரியல்ல. வீடு நானேதான் பார்த்தேன். எதிர்மனுதாரர் வேறு சமூகத்தை சார்ந்தவர் என்பதால் எனது பெற்றோர்களுக்கு பிடிக்கவில்லை என்றாலும், அதனால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. கோலாரில் எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தேன் என்றால் 3 -1/2 ஆண்டுகள் வேலை பார்த்தேன். எப்போதுவரை கோலாரில் இருந்தேன் என்றால் 1 ஆண்டு மட்டும் இருந்தேன். கோலாரில் நான் இருந்த ஒரு வருடத்தில் எதிர்மனுதாரர் என்னுடன்தான் இருந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரரிடமோ, எதிர்மனுதாரரின் குடும்பத்தினருக்கோ நான் ரூ.1,00,000/-த்தை எப்போதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வசம் கொடுத்தேன். எதிர்மனுதாரர் கையில் கொடுத்தேன் என்று மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. ரூ.1,00,000/-த்தை கொடுத்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு நான்தான் 6 பவுன் சங்கிலி, 2 பவுன் நெக்லஸ், அரை பவுன் மோதிரம் போட்டதாக சொல்வது பொய் என்றும், எதிர்மனுதாரர் வீட்டில்தான் அந்த திருமணம் காதல்

திருமணம் என்பதால் அவரது பெற்றோர்கள்தான் நகைகள் போட்டார்கள் என்றால் சரியல்ல. கொரோனோ காலத்தில் வீட்டில் இருந்து பணிபுரிந்து வந்தேன். கோலாரில் இருந்துதான் ஆன்லைன் மூலமாக வேலை செய்து வந்தேன் என்றாலும், மேட்டுரில் வைத்து வேலை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது. அவர் பெயர் சபரிகிருஷ்ணா. அவர் 19.06.2017–ல் பிறந்தார். மேற்படி குழந்தை எதிர்மனுதாரர் வசம்தான் இருக்கிறார் என்றால் சரிதான். நானும், எதிர்மனுதாரரும் 2019–ல் இருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறோம். குழந்தைக்குண்டான மருத்துவ செலவுகள், துணிமணி ஆகியவற்றை எதிர்மனுதாரர்தான் கவனித்து வருகிறார் என்றாலும் சரிதான். குழந்தை என்ன படிக்கிறார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. 2019–ல் இருந்து மேற்படி குழந்தையை நான் கவனித்தது இல்லை என்றாலும், குழந்தைக்கு வேண்டியதை செய்யவில்லை என்றாலும், 2019 முதல் கோலாரில்தான் குழந்தை இருந்து தற்போது கோலார் அரசு பள்ளியில் 1ம் வகுப்பு படித்து வருகிறார் என்றாலும் சரிதான். எதிர்மனுதாரர் அடிக்கடி பணம் கேட்கிறார். எதிர்மனுதாரர் அடிக்கடி தொந்தரவு செய்கிறார். மனதை புண்படுத்தும் வகையில் நடந்து கொண்டார். என் மனைவி என்னை தொந்தரவு செய்தது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ஒரு முறை கொடுத்தேன். அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் என்னை தொந்தரவு செய்யவில்லை என்றாலும், பணம் கேட்டு அடிக்கடி தொந்தரவு செய்யவில்லை என்றாலும், எதிர்மனுதாரரும் நானும் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதாலும், என் தாயார்தான் தொந்தரவு செய்தார்கள் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரருடன் உடன்பிறந்தவர்கள் இரண்டு அக்கா, ஒரு தம்பி. அவர்கள் அனைவரும் தனித்தனியே திருமணம் ஆகி வசித்து வருகிறார்கள் என்றால் அக்காவுக்கு திருமணம் ஆனது தெரியும். தம்பிக்கு திருமணம் ஆனது தெரியாது. 15.11.2016–ல் என்னுடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.16,000/– ஆகும். எதிர்மனுதாரருக்கு எவ்வளவு சம்பளம் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 15.11.2016–ம் தேதியில் ரூ.3,00,000/– எதிர்மனுதாரருடைய தம்பி கேட்டு நான் கொடுக்காததால் எதிர்மனுதாரர் கோபப்பட்டு வீட்டை விட்டு சென்றுவிட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதுபோன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 02.12.2017–ம் தேதியில் எதிர்மனுதாரர் என்னோடு சட்டையிட்டு கோலாருக்கு சென்றுவிட்டதாக நான் மனுவில் சொல்லியுள்ளது பொய் என்றாலும் சரியல்ல. 02.12.2017–ம் தேதியில் வீட்டை விட்டு வெளியேறிவிட்டதாக நான் சொல்லியுள்ளேன், எப்போது வீட்டிற்கு வந்தார் என்றால் 16.04.2018–ம் வீட்டிற்கு வந்தார். நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அந்த சமயத்தில் எதிர்மனுதாரர் என்னோடு கோலாரில்தான் வசித்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னோடு பிரிந்து வாழ்ந்ததாக நான் சொல்லும் இந்த நான்கு

மாத காலத்தில் அவரை என்னோடு சேர்ந்து வாழ வரச்சொல்லி வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஆனால் காவல்நிலையத்தில் அதற்கான இரசீது தரவில்லை. எதிர்மனுதாரர் வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் நான், என் தாயார் பேச்சை கேட்டு 21.06.2019–ல் எதிர்மனுதாரரை அடித்து வீட்டை விட்டு அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. 2019–ல் இருந்தே நான் மாலூரில்தான் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. சொந்த ஊருக்கு வந்துவிட்டேன். கடந்த 2019–ம் வருடத்தில் நான் மாலூரில் உள்ள மாதுஸ்ரீ கார்டன் என்ற முகவரியில் வசித்து வந்தேன் என்றால் அங்கு வசிக்கவில்லை. நான் அந்த வீட்டில் வசிக்கும்போது அத்துமீறி எதிர்மனுதாரருடைய தம்பி அஞ்சன்குமார், அம்மா மற்றும் தம்பியின் நண்பர் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து என்னை தாக்கியதாக மாலூரில் உள்ள சிவில் ஜட்ஜ் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களிடம் தனிப்புகார் கொடுத்தேன் என்றால் உண்மைதான். அது **எ.ம.சா.ஆ.1** ஆகும். அந்த வழக்கில் விசாரணை நடைபெற்று மேற்சொன்ன மூன்று பேரும் குற்றவாளிகள் இல்லை என்று விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான். 2019–ல் எதிர்மனுதாரர் என்னோடுதான் வசித்து வந்தார் என்றாலும், அவர் வீட்டை விட்டு சென்றுவிட்டதாக இந்த மனுவிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை வேறு ஒரு பெண்ணோடு தொடர்புபடுத்தி சொல்லியுள்ளது சம்மந்தமாக அந்த பெண்ணின் பெயரை இந்த மனுவில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் எப்போதும் என்னை வேறொரு பெண்ணோடு தொடர்புபடுத்தி பேசியது கிடையாது என்றாலும், இந்த மனுவிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது நான் எங்கு வசிக்கிறேன் என்றால் 14/11, யூனியன் பள்ளி தெரு, பி.என்.பட்டி, தொட்டில்பட்டி கிராமம், மேட்டுர் வட்டத்தில் வசித்து வருகிறேன். இந்த மனுவிற்காகதான் மேற்படி முகவரியை நான் சொல்லியுள்ளேன் என்றாலும், மாலூரில்தான் தற்போது வரை வசித்து வருகிறேன் என்றாலும், மனுவில் சொல்லியுள்ள முகவரியில் நான் எந்த காலத்திலும் வசிக்கவில்லை என்றாலும், இந்த நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. சமூகம் நீதிமன்றத்திலிருந்து எதிர்மனுதாரர் வீடு எவ்வளவு தொலைவில் இருந்தது என்றால் சுமார் 200 கி.மீ. இருக்கும். எதிர்மனுதாரரை அலைகழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கோலாரில் உள்ள குடும்ப நல நீதிமன்றத்தில் எனது மனைவி என்னுடன் சேர்ந்து வாழ ஒரு மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு எண்.எம்.சி.54/2020 என்றால் சரிதான். மேற்படி வழக்கிற்கு நான் வழக்கறிஞர் மூலமாக ஆஜர் ஆனேன். மேற்படி வழக்கில் எதிர்மனுதாரருக்கு சாதகமாக சேர்ந்து வாழ சொல்லி உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் உத்தரவு வழங்கப்பட்ட பிறகும் எதிர்மனுதாரர்தான் என்னோடு வரவில்லை. எதிர்மனுதாரர்

மற்றும் என் மகனோடு இப்போது சேர்ந்து வாழ நான் தயாராக உள்ளேன் என்றால் தயாராக உள்ளேன். எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தாக்கல் செய்த மனுவில் உத்தரவு வழங்கப்பட்ட பிறகுதான் இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த உத்தரவுக்கு பிறகும் எதிர்மனுதாரர் என்னோடு வாழ வராததால் இந்த மனுவை தாக்கல் செய்தேன். ஜீவனாம்சம் வழங்க கோலார் நீதிமன்றத்தில் உத்தரவு வழங்கப்பட்டு இன்றுவரை நான் ஜீவனாம்சம் வழங்கவில்லை என்றால் அந்த உத்தரவு பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஜீவனாம்சம் வழங்க உத்தரவு வழங்கப்பட்ட விபரத்தை எதிர்மனுதாரர் அவரது எதிருரையில் சொல்லியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. ஏற்கனவே எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மனுவில் என்னோடு சேர்ந்து வாழ உத்தரவு வழங்கப்பட்டுவிட்டதால் அதன்பிறகு தாக்கல் செய்த இந்த விவாகரத்து மனு சட்டப்படி நிலைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஒருவேளை ஒரு இடைக்கால மனுவாக ஜீவனாம்சம் கேட்டு மனுதாக்கல் செய்யப்பட்டால் ஒரு கணவர் மற்றும் ஒரு தகப்பனாராக எதிர்மனுதாரருக்கும், என் குழந்தைக்கும் வேண்டிய உதவிகளை செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். எதிர்மனுதாரர் எந்தவகையிலும், மனத்தொந்தரவோ, பணத்தொந்தரவோ செய்யவில்லை என்றாலும், ஆகவே விவாகரத்து பெற எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தற்போதுவரை நான் கோலாரில்தான் பணிபுரிந்து வருகிறேன் என்றாலும், இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது என்றாலும், இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u> இல்லை.**

**ஒம்/– PW1**

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.